**கிராமின் கிருஷி ம aus சம் சேவா**

இந்தியா வானிலை ஆய்வு துறை

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்

கோவை, தமிழ்நாடு

# அக்ரோமெட் ஆலோசனை புல்லட்டின்

**தேதி : 23-08-2022**

**புதுக்கோட்டை(தமிழ்நாடு) வானிலை முன்னறிவிப்பு - அன்று வெளியிடப்பட்ட :2022-08-23 ( அடுத்த 5 நாட்களில் 8:30 IST வரை செல்லுபடியாகும்)**

| வானிலை காரணி | 2022-08-24 | 2022-08-25 | 2022-08-26 | 2022-08-27 | 2022-08-28 |
|---|---|---|---|---|---|
| மழையளவு (மி.மீ ) | 26.0 | 26.0 | 6.0 | 26.0 | 5.0 |
| அதிக பட்ச வெப்பநிலை ( oசெ ) | 36.0 | 34.0 | 34.0 | 34.0 | 35.0 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (o செ ) | 25.0 | 23.0 | 23.0 | 23.0 | 24.0 |
| அதிக பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 70 | 70 | 70 | 70 | 70 |
| குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 40 | 40 | 40 | 40 | 40 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணி ) | 6.0 | 6.0 | 8.0 | 6.0 | 6.0 |
| காற்றின் திசை (கோணம்) | 280 | 280 | 270 | 273 | 281 |
| மேக மூட்டம் (ஆக்டா) | 8 | 8 | 8 | 8 | 8 |

## வானிலை சுருக்கம் / எச்சரிக்கை:

புதுக்கோட்டை மாவட்டத்தில் அடுத்த ஐந்து நாட்களுக்கு மிதமான மழை முதல் கனமழை வரை பெய்ய வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்ப நிலை 34.0°C - 36.0°C எனும் வேறுபாட்டிலும், குறைந்தபட்ச வெப்ப நிலை 23.0°C - 25.0°C. வேறுபாட்டிலும் இருக்கும். வானம் அடுத்த ஐந்து நாட்களுக்கு மேகமூட்டத்துடன் காணப்படும். காற்றின் வேகம் மணிக்கு 06 - 08 கிலோமீட்டர் வேகம் இருக்கும் என எதிர்பார்க்கலாம்.

## பொது ஆலோசனை:

விரிவாக்கப்பட்ட வரம்பு மழை முன்னறிவிப்பு : ஆகஸ்ட் 28 முதல் செப்டம்பர் 03 வரையிலான காலகட்டத்தில் தமிழ்நாடுட்டில் இயல்புக்கு மேல் மழை பெய்ய வாய்ப்பு உள்ளது . அதிகபட்ச வெப்பநிலை மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை இயல்பானது இருக்கும்.

## குறுஞ்செய்தி :

மழை எதிர்பார்க்கப்படுவதால் சம்பா நடவுக்கு தயாராக இருக்கும் நாற்றங்காலுக்கு முறையான வடிகால் வசதி அமைக்கவும் .

## பயிர் குறிப்பிட்ட ஆலோசனை:

| பயிர் | பயிர் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| நெல் | எதிர்பார்க்கும் மழை பயன்படுத்தி சம்பா பருவத்தில் நேரடி விதைப்பு செய்யும் பொழுது டிராக்டர் மூலம் விதைக்கும் கருவிக்கு ஏக்கருக்கு 15 கிலோ மற்றும் ஆட்கள் கொண்டு தெளிக்கும் போது ஏக்கருக்கு 30 கிலோ விதை அளவும் பரிந்துரைக்கப்படுகிறது. விதைப்பதற்கு முன் விதைகளை சூடோமோனாஸ் என்ற அளவில் விதை நேர்த்தி செய்து விதைக்க வேண்டும் இதனால் விதைகளின் முளைப்புத்திறன் மற்றும் வீரிய தண்மை அதிகரிக்கும். ஆவணி படத்தில் நெல் நடவு செய்யவுள்ள விவசாயிகள் தூர்களின் எண்ணிக்கையை அதிகரித்து நல்ல மகசூல் பெற ஏக்கருக்கு 10 கிலோ நுண்ணூட்டக் கலவையை மக்கிய தொழு உரத்துடன் ஊட்டமேற்றிய அடியுரமாக இடவேண்டும். |

## தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை:

| தோட்டக்கலை | தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| வாழை | காற்றின் வேகம் அதிகமாக இருப்பதால் வாழை மரங்கள் மரங்களை மூங்கில் கம்புகளால் முட்டுக்கொடுக்கவும் . தற்போது வாழை சாகுபடி செய்து இருக்கும் விவசாயிகள் ஏக்கருக்கு 8 கிலோ தட்டை பயிர் ஊடுபயிராக சாகுபடி செய்து 50 % பூக்கும் தருணத்தில் மடக்கி மண்ணில் உழும்போது மண் வளம் மேம்படும் களைகள் கட்டுப்படும் மழை நீர் சேமிக்கப்படும். |
| தென்னை | தென்னையில் போரான் பற்றாக்குறை யினால் ஏற்படும் குரும்பை உதிர்வதை தடுக்க போராக்ஸ் என்ற உரத்தினை ஒரு மரத்திற்கு 50 கிராம் என்ற அளவில் மணல் அல்லது எருவுடன் கலந்து இடவும் . |
| கத்திரிக்காய் | தற்போது நிலவும் பருவநிலையில் கத்தரியில் இலைப்புள்ளி நோய் தாக்குதல் தென்படுகின்றது. கத்திரிபயிரில் பருவமழைக் காலங்களில் வானம் மேக மூட்டத்துடன் இருக்கும் சமயங்களில் இலைப்புள்ளி நோய் அதிகமாகக் காணப்படும். இதனைக் கட்டுப்படுத்த ஒரு லிட்டர் தண்ணீருணீ க்கு 2 கிராம் காப்பர் ஆக்ஸிகுளோரைடு அல்லது 2½ கிராம் ஜினெப் என்ற அளவில் ஏதேனும் ஒன்றை கலந்து தெளிக்க வேண்டும். |

## உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை:

| உயிருள்ள விலங்குகள் | உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| பசு | அடுத்து வரும் நாட்களில் மழை பெய்ய வாய்ப்புள்ளதால் கால்நடைகளை மழைச்சாரல் நனையாமல் இருக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டும் . உலர் தீவனம் மற்றும் அடர் தீவனங்களை தண்ணீர் புகாத சேமிப்பு கிடங்குகளில் பாதுகாத்து வைக்க வேண்டும். |
| வெள்ளாடு | மழை காலங்களில் வரும் தொற்று நோய்களை தடுப்பதற்காக சினையுற்ற ஆடுகளுக்கு எதிர்ப்பாற்றலை ஊக்குவிக்கும் வைட்டமின் மற்றும் தாது உப்புக்கள் தீவனத்துடன் கலந்து கொடுக்கவேண்டும் . |

## கோழிப்பண்ணை குறிப்பிட்ட ஆலோசனை:

| கோழிப்பண்ணை | கோழிப்பண்ணை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|

| கோழிப்பண்ணை | கோழிப்பண்ணை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| கோழி | கோழிகளைத் தாக்கும் கழிச்சல் நோய் தாக்குதல் பரவலாக தென்பட வாய்ப்பு உள்ளது. நோய் தாக்கப்பட்ட கோழிகளை தனியாக பிரித்து வைத்து பராமரிக்க வேண்டும். பின் நோய் பாதிக்கப்பட்ட மற்றும் நோய் பாதிக்கப்படாத கோழி மற்றும் குஞ்சுகளுக்கு 1 லிட்டர் தண்ணீரினீல் 2கிராம் மைக்ரசால் பவுடர் அல்லது 2கிராம் பேக்டிரிசால் பவுடர் மருந்துகளில் ஏதேனும் ஒன்றுடன் 5 மில்லி வைம்ரால்சிரப் இரண்டையும் கலந்து அனைத்து கோழிகளுக்கும் 5 நாட்களுக்கு காலை மாலை என 2 வேளை குடிக்க கொடுக்க வேண்டும். |

## பிற ( மண்/ நில தயாரிப்பு) குறிப்பிட்ட ஆலோசனை:

| பிற ( மண்/ நில தயாரிப்பு) | பிற ( மண்/ நில தயாரிப்பு) குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| பொது ஆலோசனை | மிதமான முதல் கனமழை எதிர்பார்க்கப்படுவதால் அனைத்துப்பயிர்க்கும் போதிய வடிகால் வசதி செய்ய வேண்டும். மருந்து தெளிப்பதையும் உரமிடுவதையும் குறைந்தது 6 மணி நேரத்திற்கு மழையில்லாத நேரங்களில் மட்டுமே மேற்கொள்ள வேண்டும். அதிகப்படியான மழை நீரை பண்ணைக் குட்டைகளில் சேகரிப்பதன் மூலம் வறட்சியான காலத்தில் பயன்படுத்தலாம். |